மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
(வளர்ச்சிப் பிரிவு)
28 JUL 2022
நாமக்கல்



**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - நாமக்கல் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான இளநிலை உதவியாளர் திரு.(லேட்)இ.அன்பழகன் என்பவரின் மகன் திரு.அ.சசிகுமார் – இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்தது- பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை**

அரசாணை (2ப) எண்.11

நாள்: 24.02.2022.
பிலவ, மாசி 12
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. அரசாணை (4டி) எண்.16, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை, நாள்:22.04.2020.
3. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறையாணை ந.க.எண்.நி4/35147/2017, நாள் 29.06.2020.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.48127/2020/டி1, நாள்: 24.09.2021.

*****

**ஆணை:**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 25.03.2001 அன்று பணியிடைக்காலமான திரு.(லேட்)இ.அன்பழகன் என்பவரின் மகன் திரு.அ.சசிகுமார்

என்பவருக்கு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 01.07.2020 முற்பகல் முதல்பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலும், அவர் தனது கடிதத்தில், மறைந்த அரசு ஊழியரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என இராசிபுரம் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றும், அவரது மகன் திரு.அ.சசிகுமார் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 02.11.2017 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 25.02.1993 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 08 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 24 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 27 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சுவர்ந்தாய்வு செய்யப்பட்டு, தனியர் பணிநியமனத்தின் போது கருணை அடிப்படை பணி நியமனம் கோரி அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளிக்காத நிலையில், அவர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b) மற்றும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020 ஆகியவற்றை தளர்வு செய்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பணிநியமனம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.அ.சசிகுமார் என்பவர் பணி நியமனத்திற்கான மற்ற அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 01.07.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வினை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 15.11.2021–ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.18987/ட்டி1/2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சாராஎண்.35192/கி1/2021, நாள்:30.11.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18/20.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை –15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

<u>நகல்:</u>
திரு.அ.சசிகுமார் , இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, நாமக்கல் மாவட்டம்.
(வழிமாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

வே.எ.ந.க.எண். 2363/2020/அ1, வட்டார வளர்ச்சி அலுவலகம்,
நாள்– 17/08/2022 மல்லசமுத்திரம் வட்டாரம்.

// சார்வு செய்யப்படுகிறது //

2/4

பெறுநர்–
திரு. அ.சசிகுமார்,
இளநிலை உதவியாளர்,
மல்லசமுத்திரம் வட்டாரம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
மல்லசமுத்திரம்

நகல்– "அ" இருப்புக்கோப்பிற்கு,